DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பாக்கியம் | Father/Husband Name : தங்கம் |
| Age : 40 | Village : சங்கராபுரம் |
| Taluk : | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 10, 2025 12:23 PM

(A1, A2 Present)

**முதல் விசாரணை :-**

1. நான் சங்கராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்னர் நான் தீபாவளி சமயம் என்பதால் வீட்டில் பலகாரம் தயார் செய்துகொண்டிருந்தேன். எதிரி மணி என்பவரது ஆட்டுப்பண்ணையில் வெடி வெடிக்கும் சத்தம் கேட்டது. நானும், ஊரில் உள்ள மக்களும் ஓடிச்சென்று பார்த்தபோது, அங்கிருந்த சிறுவர்கள் நிதீஷ், பாண்டி மற்றும் கணேஷ் ஆகியோர் வெடி விபத்தில் காயம்பட்டு கிடந்தார்கள். சம்பவத்தினமானது அந்த ஆண்டின் தீபாவளி பண்டிகை மறுநாள் ஆகும். எதனால் வெடி விபத்து ஏற்பட்டது என்றால் வெடி கழிவுகள் வெடித்திருக்கலாம். வெடிக்கழிவுகள் சம்பவம் நடந்த இடத்திற்கு எவ்வாறு வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பின்னர் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். காயம்பட்டவர்கள் எங்கு சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி அளவில் பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

3. இவ்வழக்கில் விபத்து நடந்த இடம் யாருக்கு சொந்தமானது என்றால் அது விளையாட்டு மைதானம் ஆகும். கடந்த 09.11.2018 ம் தேதி காலை 09.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் வெடி மருந்துகளை சிறுவர் விளையாடும் கிரிக்கெட் மைதானத்தில் சிறுவர்கள் விளையாடக்கூடாது என்ற எண்ணத்தில் சிதறினார்கள் என்றால் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. தற்போது எதிரிகள் தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Nov 10, 2025 12:31 PM

Judicial Magistrate 2, Sattur